இந்திய உச்ச நீதிமன்றம்

2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10 ஆம் நாள்

(மாண்புமிகு நீதியரசர் திரு. சஞ்சய்கிஷன் கவுல் மற்றும் மாண்புமிகு நீதியரசர் திரு. B.R.கவாய்)

உரிமையியல் மேல்முறையீடு வரையறை

உரிமையியல் மேல்முறையீடு எண்.18278/2017

வைஷ்ணோ தேவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்
சார்பாக அதன் உரிமையாளர்(D) **வாரிசுதாரர்கள் மற்றும் ஒருவர்**

.....**மேல்முறையீட்டாளர்கள்.**

எதிர்

இந்திய அரசாங்கம் மற்றும் சிலர் .....**எதிர் மேல்முறையீட்டாளர்கள்.**

.

உடன்

நீதியரசர் சஞ்சய்கிஷன் கவுல் மற்றும் நீதியரசர் B.R.கவாய்

உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908- கட்டளை 21, விதி 16 - தீர்ப்புரை மற்றும் தீர்பாணையை நிறைவேற்றுதல் - தீர்ப்பாணையை நிறைவேற்றுவதை மாற்றம் செய்தவதற்கான மனு - உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 16 - உடனினைந்த உரிமையியல் நடைமுறை சட்டம் 1973 ன் 54 வது அறிக்கையின் படி இந்திய சட்ட ஆணையத்தின் பரிந்துரையின் படி - 01.02.1977 முதல் (உரிமையியல் நடைமுறை திருத்தச் சட்டம், 1976) சட்டம 104 / 1976 ன் படி ஜோகல் கிஷோர் சாரவ் என்ற வழக்கில் கட்டளை 21 விதி 16ன் படி தீர்ப்பாணை பெயர் மாற்றம் பெற்றவர் அளிக்கும் நிறைவேற்றம் விண்ணப்பத்தின் பெயரில் ஒரு தீர்ப்பாணையையோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு கூட்டாகவோ வழங்கப்பட்டால், தீர்ப்பாணை பெற்றவர் முலமாக ஒப்படைப்பு அளிக்கப்பட்டால் அல்லது சட்டத்தின் ஏதாவது விதிகளின் படி மாற்றம் ஏற்பட்டால் பெயர் மாற்றம் பெற்றவர் எந்த நீதிமன்றத்தில் தீர்ப்பாணை உத்தரவு வழங்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்தில் நிறைவேற்றும் மனுவை

அளித்து பொதுவாக தீர்ப்பாணை பெற்றவர் அளித்த நிறைவேற்றும் மனுபோலவே பாவிக்கப்பட்டு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்- உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 146ல் ஆஜராகுபவர் சார்பிலோ அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி இந்த சட்டத்தில் குறிப்பிடபட்டுள்ளது - கட்டளை XXIவிதி 16ன் மீது ஏற்படுத்தப்பட்ட மாற்றம் ஒரு கூடுதல் சேர்க்கப்பட்ட விளக்கமே தவிர அந்த விளக்கம் இதற்கு முன்பு இல்லை என்றும் இருதரப்பாராலும் ஒத்துக்கொள்ளப்பட்டது. தற்பொழுது இந்திய சட்ட ஆணையம் தன்னுடைய 54வது அறிக்கையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் 1908 பற்றி குறிப்பிட்டிருக்கிறது. இந்த வழக்கும் அதில் சேர்க்கப்பட்டதன் காரணம் நீதிமன்றங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தீர்ப்புகளை அளித்ததால் தான். அதாவது ஒரு தீர்ப்பாணை சம்பந்தப்பட்ட எழுத்து முலமாக ஒப்படைப்பு பெறாத ஒருவர் ஆனால் தீர்ப்பாணை பெற்றவரின் உரிமைகளை கோரலாம் என்று உரிமையியல் நடைமுறை சட்டத்தின் 146வது பிரிவிற்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது - ஜூகல் கிஷோர் ஷராப் வழக்கில் இரண்டு விதமான விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே தான் சட்ட ஆணையம் சட்டத்தின்படி உள்ள நிலையை தெளிவாக்குவதற்காக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் செல்லத்தகாதவை என்றும் காட்டப்பட்டுள்ளன. சட்ட ஆணையம் அளித்துள்ள விளக்கத்தின் படி கட்டளை XXI விதி 16 மீது ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் எந்த வகையிலும் சட்டத்தின் பிரிவு 146ஐ பாதிக்காது என்றும் சொத்து பரிமாற்றம் என்பது உரிமையியல் வழக்கின் ஒரு விஷயம் என்றும் தனியாக ஒரு ஒப்படைப்பை கோராமல் தீர்பாணையை நிறைவேற்றலாம் என்றும் உள்ளது. மேல்முறையீட்டாளர்கள் உரிமையியல் வழக்குகளில் தரப்பினர் அல்ல என்றாலும் கூட சந்தேகமின்றி தீர்ப்பாணை பெற்றவரின் ஒப்படைப்பு பெற்றவர்கள் என்று தங்களை அடையாளப்படுத்தி கொள்கிறார்கள்.

மாண்புமிகு நீதியரசர் சஞ்சய் கிஷன் கௌல் அவர்களால் அளிக்கப்பட்ட,

தீர்ப்புரை

1. இந்த மேல்முறையீட்டு வழக்கு மேல்முறையீட்டுதாளர்களின் கோரிக்கையான தீர்ப்பாணை பெற்றவர்களிடம் ஒப்படைப்பு பெற்றவர் கட்டளை XX1 விதி 16 உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 (இனி முதல் சிபிசி என்று அழைக்கப்படும்) . மேல்முறையீட்டாளர்கள் சிபிசி பிரிவு 47 மற்றும் உரிமையியல் சட்டம் பிரிவு 146 உடன் படிக்க பிரிவு 2(1)(g)ன் கீழ் ஒத்திசைவு மற்றும் நடுவர் தீர்ப்பு சட்டம் 1996ன் கீழ் (இனி முதல் ஏ & சி சட்டம் என்று அழைக்கப்படுவது), இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை XXI விதி 16ன் கீழ் விரிவாக விளக்கம் அளித்திருக்கிறார்கள். இந்த விளக்கம் சட்ட ஆணையத்தின் 54வது அறிக்கையின் படி உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1973ன் படி பெறப்பட்டுள்ளது. இது பற்றி

உயர்நீதிமன்றத்தில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு உள்ளன.

2. கருத்து வேறுபாடுகள் பற்றி நன்கு அறிவதற்கு தேவையான சங்கதிகள் 29.12.1995 அன்று, ஒரு ஒப்பந்தம் இந்திய அரசாங்கத்தால் திரு,சுரேந்திரநாத் கனுான்கோ(எ) S.N.கனுான்கோ-க்கு அளிக்கப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம் போர்ட் பிளர் விமான நிலையத்தின் விரிவாக்க பணிகளுக்கான ஒப்பந்தம் ஆகும். (இனி முதல் பணிகள் என்று அழைக்கப்படுவது). திரு. S.N.கனுான்கோ அவர்கள் 2012 ஆம் ஆண்டு காலமாகிவிட்டார், அவர் சார்பில் தற்போதைய நடைமுறைகளில் அவருடைய வாரிசுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் எண்.2 முதல் 7 வரையிலானவர்கள் உள்ளார்கள். எதிர்மனுதாரர்கள் எண்.1 ஒப்பந்தத்தை அளிக்க அதிகார மையமாகும்.

3. திரு. S.N.கனுான்கோ அவர் உயிருடன் இருந்து செயல்பட்ட போது பணிகளை வைஷ்ணோ தேவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்திற்கு ஒப்படைப்பு செய்திருந்தார். இந்த நிறுவனம் ஒரு தனி உடைமையாளர் நிறுவனமாகும். இதன் உரிமையாளர் திரு.பிரபாத்பூஷன் கனுான்கோ (உரிமையியல் மேல்முறையீடு எண்.18278/2017ல் மேல்முறையீட்டாளர் எண்.1 ஆக உள்ளார்) இதே நேரத்தில் 2வது மேல்முறையீட்டாளரான சுர்யபிரகாஷ் கனுான்கோ என்பவரும் பணிகளை செய்யும் பொறுப்பில் இருந்தார். அதே போல வேறு ஒரு விதமான பணி பீடீ பில்டர்ஸ் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டிருந்தது. இந்த நிறுவனத்தின் பூரண உரிமையாளர் ஸ்வப்னா தாஸ் ஆவார், முன் நடந்தது போலவே இவருடைய கணவர் திரு. பீஜோய் குமார் தாஸ் அவர்கள் பணிகளை செயல்படுத்துவதில் முக்கிய பங்கேற்றுக் கொண்டிருந்தார், இந்த இரு தரப்பினரும் மேல்முறையீட்டாளர் எண்.1 என்றும், 2 என்றும் உரிமையியல் மேல்முறையீடு எண்.18279/2017ல் அடையாளப்படுத்தப்பட்டுளளார். திரு. S.N.கனுான்கோ ஒரு சிறப்பு தரமான ஒப்பந்ததாரர் ஆவார். மேல்முறையீட்டார்கள் அளித்துள்ள விவரங்கள் படி அவர்கள் S.N. கனுான்கோ சார்பில் பணிகளை தொடர்ந்து செய்து வந்திருந்தார்கள் அவர்களுக்கு மாதாந்திர ஊதியங்கள் வழங்கப்பட்டு வந்தன. சில உபகரணங்கள் இந்த மேல்முறையீட்டாளர்களின் கோரிக்கை என்னவென்றால் அவர்கள் திரு,S.N.கனுான்கோ அவர்கள் சார்பாக நடைபெறும் பணிகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் செய்த சில பணிகளுக்காக கட்டணங்கள் அளிக்கப்படவில்லை, திரு.S.N.கனுான்கோ அவர்களுடன் ஒரு ஒப்படைப்பு பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டு திரு. பிரபாத் புஷன் கனுாங்கோ பெயரில் ருபாய் ஒரு கோடிக்கு காசோலையும், பணி பாதுகாப்புக்காக 27.10.1999 அன்று அளிக்க வேண்டிய கட்டணணங்களுக்காக அளித்திருந்தார். இந்த தொகைக்கு இரு மேல்முறையீட்டாளர்களுமே உரிமை கொண்டாடுகிறார்கள்.

4. இந்த கட்டத்தில் திரு.S.N.கனுான்கோ அவர்களும் ஒன்றாம் எதிர்மனுதாரருக்கும் இடையில் பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன. அந்த பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்காக அவர்கள் நடுவர் மையத்தை அனுகி 1ம் மனுதாரர் சார்பில் ஒரு உத்தரவு 22.03.1999 அன்று வழங்கப்பட்டது. அதன்படி 28.01.2001 தேதியன்று திரு, S.N. கனுான்கோ அவர்களுக்கும் பணம் அளிக்கப்பட்டது.

5. இதே போன்று வேறு ஒரு தொகைக்காவும் கோரிக்கைகள் பார்வைக்கு கொண்டு வரப்பட்டு 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து தனக்கு பணம் வர வேண்டும் என்று திரு. S.N. கனுான்கோ கோரியிருந்தார். இந்த பிரச்சனை திரு.டி.கே.மிஸ்ரா என்கிற நடுநிலைமை தீர்ப்பாளரிடம் கொண்டு செல்லப்பட்டு அவர் திரு. S.N. கனுான்கோ அவர்கள் சார்பில் 31.10.2006 அன்று ஒரு உத்தரவை வழங்கியிருக்கிறார். அதற்கு எதிராக அந்த நடுநிலைமையாளர்களின் உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று 1ம் எதிர்மனுதாரர் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் ஏ & சி சட்டத்தின் பி ாிவு 34ன் கீழ் மனு அளித்திருந்தார். அந்த மனுவின் மீது கற்றறிந்த உயர்நீதிமன்ற தனி நீதிபதி 28.9.2007 அன்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார். அந்த உத்தரவிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தின் அமர்வில் மேல்முறையீடு செய்யப்பட்டு தனி நீதிபதி அளித்த உத்தரவை மாற்றியமைக்கப்பட்டு, அமர்வு நீதிமன்றம் 03.03.2008 அன்று தீர்ப்பு வழங்கி அந்த மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

6. தனக்கு வரவேண்டிய தொகையை பெறுவதற்காக திரு. S.N. கனுான்கோ போர்ட்பிளேர் மாவட்ட நீதிமன்றத்தில் நிறைவேற்ற மனு எண்.01/ 2008ஐ தாக்கல் செய்திருந்தார், இந்த மனு நிலுவையில் இருக்கும் பொழுது 1ம் எதிர்மனுதாரர் உச்சநீதிமன்றத்தில் ஒரு சிறப்பு அனுமதி மனுவை சமர்பித்து அதன் எஸ் எல்ப்(சி) எண். 21507/2008ஐ அமர்வு நீதிமன்றத்தின் 03.03.2008 தேதியிட்ட தீர்ப்புரைக்கு எதிராக சமர்ப்பித்து அந்த தீர்ப்புரையின் படி நிறைவேற்ற நடவடிக்கைகளுக்கு தடை கோரியிருந்தார். இது குறித்து அறிவிப்பு அனுப்பபட்டு , நடவடிக்கைகளுக்கும் தற்காலிக தடை விதிக்கப்பட்டது. இந்த சிறப்பு அனுமதி மனு நிலுவையில் இருக்கும் பொழுதே 2012ம் ஆண்டு திரு,S.N. கனுான்கோ காலமாகிவிட்டார். அவருக்கு பதிலாக சிறப்பு அனுமதி மனுவிலும் நிறைவேற்ற நடவடிக்கைகளிலும் அவர்களது வாரிசுதாரர் சோர்க்கப்பட்டனர். இந்த நிலையில் உச்ச நீதிமன்றம் சிறப்பு அனுமதி மனுவை தன்னுடைய உத்தரவு தேதி 19.01.2016ன் படி தள்ளுபடி செய்துவிட்டது. ஆனால் வட்டி விகிதம் மட்டும் சற்று மாற்றி அனுமதிக்கப்பட்டது. இந்த வட்டி விகிதம் அதிகமாக உள்ளது என்றும் அதை மாற்ற வேண்டும் 8% (சாதாரண வட்டி) ஆக குறைக்கும்படி பில் தேதியிலிருந்து கோரப்பட்டிருந்தது.

7. இந்த தருணத்தில் மேல்முறையீட்டாளர்கள் இருவரும் தங்கள் ஆட்சேபனைகளை தெரிவித்து உரிமையியல் நடைமுறைச் சட்டம் 47 உடன்படிக்க கட்டளை 22 விதி 1 & 2ன் கீழ் ஏ&சி சட்டத்தின் பிரிவுகள் 2(1)(g) மற்றும் 36ன் கீழ் சமர்ப்பித்துள்ளார்.

8. மேல்முறையீட்டாளர்களின் கோரிக்கைகள் காலஞ்சென்ற திரு. S.N. கனுான்கோ அவர்கள் அளித்த ஒப்படைப்பின் அடிப்படையில் இருந்தது, ஆகவே இந்த தொகைகளை முழுவதுமாக விடுவிப்பதற்கு அவர்களுடைய நலன்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்று கோரியுள்ளார். ஆனால் இவர்கள் கேட்ட இடைக்கால தீர்வுகள் அவர்களுக்கு கிடைக்கவில்லை. அவர்களுடைய விண்ணபங்கள் 08.04.2016 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன. முடிவாக 26.12.2016 அன்று இரண்டு தரப்பு ஆட்சேபனைகளும் தீர்ப்பாணை தொகையின் மீது உரிமை கோரி சமர்பிக்கப்பட்டு அவைகளையும் நிறைவேற்றும் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. காரணம் ஒப்படைப்பு பத்திரமும் காசோலையும் காரணத்திற்கு தான் அளிக்கப்பட்டன என்று நிருபிக்க இயலவில்லை. அதே சமயம் இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால் இது சம்பந்தமாக நிறைவேற்றும் நீதிமன்றத்தில் விசாரணை எதுவும் நடைபெறவில்லை.

9. மேற்கண்ட உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டும் என்று கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் ஒரு உரிமையியல் மனு சமர்பிக்கப்பட்டு அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது, அந்த தள்ளுபடி செய்யப்பட்ட தீர்ப்புரை தான் 13.02.2017 தேதியிட்ட குறையுள்ள தீர்ப்புரை என்று சொல்லப்பட்டுள்ளது, இதன் மீது சிறப்பு அனுமதி மனு சமர்பிக்கப்பட்டு அதற்கான அறிவிப்பு 17.04.2017 அன்று பெறப்பட்டது. அந்த உத்தரவில் எது எப்படி உள்ளதோ அது அப்படியே இருக்க வேண்டும் என்று இந்த வழக்கு முடியும் வரை குறிப்பிடப்பட்டிருந்தது. குறிப்பாக, உத்தரவின் சில அம்சங்கள் 1ம் எதிர்மனுதாரரின் நலன்களுக்கு எதிராக உள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரர் தீர்பாணை தொகையை வைப்பீடு செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டு 06.03.2018 தேதி உத்தரவுப்படி நிறைவேற்றும் நீதிமன்றத்தில் அந்த தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது வட்டித் தொகையுடன் கூடிய வைப்பீடு தொகையாக வைக்கப்பட்டுள்ளது என்பதை ஒரு முன் நோக்கமாக கருத வேணடியுள்ளது.

மேல்முறையீட்டார்களின் சமர்ப்பணங்கள்:

10. மேல்முறையீட்டாளர்களின் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மேல்முறையீட்டாளர்கள் திரு.S.N. கனுான்கோ அவர்களின் அதிகாரப்பூ வமான ஒப்படைப்பு சார்பாளர்கள் என்று ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறினார், இதற்கு

ஆதரவாக கட்டளை 21 விதி 16ன் மீது ஏற்படுத்தப்பட்ட திருத்தத்தை சுட்டிக்காட்டினார். இதற்கு அவருடைய விண்ணப்பங்கள் உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் 47வது பிரிவின் கீழ் பிரிவு 146 உடன் படிக்க பிரிவு2(1)(g) ஏ&சி சட்டத்தின் படி சமர்பிக்கப்பட்டு திரு. S.N.கனூன் கோ அவர்கள் தானாகவே தன்னிச்சையாக 27.10,1999 தேதியிட்ட ஒப்படைப்பு பத்திரத்தை வழங்கியிருக்கிறார்கள் என்றும் இது எழுத்துமுலமான ஆவணம் என்றும் இதன் கூடவே பாதுகாப்பிற்காக ஒரு காசோலையும் வழங்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார்.

11. உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை XXI தீர்ப்பாணையை நிறைவேற்றும் உத்தரவுகள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கட்டளை XXIன் விதி 16 " தீர்ப்பாணை பெயர் மாற்றம் பெற்றவரின் "உரிமையைப் பற்றி கீழ்க்கண்டவாறு விளக்குகிறது.

கட்டளை XXI

தீர்ப்பாணை மற்றும் உத்தரவுகள் நிறைவேற்றுவது:

16. தீர்ப்பாணை பெயர் மாற்றம் பெற்றவர் அளிக்கும் நிறைவேற்றும் விண்ணப்பம்- ஒரு தீர்ப்பாணையோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு கூட்டாகவோ வழங்கப்பட்டால், தீர்ப்பாணை பெற்றவர் சார்பாக எழுத்து முலமாக ஒப்படைப்பு அளிக்கப்பட்டால் அல்லது சட்டத்தின் ஏதாவது விதிகளின் படி மாற்றம் ஏற்பட்டால் பெயர் மாற்றம் பெற்றவர் எந்த நீதிமன்றத்தில் தீர்ப்பாணை உத்தரவு வழங்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்தில் நிறைவேற்றும் மனுவை அளித்து பொதுவாக தீர்ப்பணை பெற்றவர் அளித்த நிறைவேற்றும் மனு போலவே பாவிக்கப்பட்டு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதே சமயம் மேற்கண்ட முறையில் தீர்ப்பாணை வழங்கப்பட்டால் அது ஒப்படைப்பின் முலமாக மற்றவர் பெயருக்கு மாற்றப்பட்டால் அது பற்றிய விண்ணப்பத்தின் மீது அறிவிப்பு அளிக்கப்பட்டு, தீர்ப்பாணை கடனாளிக்கும் அந்த அறிவிப்பு தெரியப்படுத்தப்பட வேண்டும். நீதிமன்றம் ஆட்சேபனைகளை கேட்டு தன்னுடைய முடிவுகளை தெரிவிக்கும் வரை அந்த தீர்ப்பாணை நிறைவேற்றம் கோர இயலாது.

அதே சமயம் இரண்டு அல்லது முன்று நபர்கள் தர வேண்டிய தொகைக்கு தீர்ப்பாணை பெறப்பட்டு அது சம்பந்தப்பட்ட நபர் ஒருவர் பெயரில் ஒப்படைப்பின் படி மாற்றப்பட்டால் அந்த தீர்ப்பாணை மற்றவர்களுக்கு எதிராக நிறைவேற்றம் செய்யப்பட மாட்டாது. (விளக்கம்- இதில் கண்டுள்ளவை எவையும் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 146வது பிரிவை பாதிக்காது, சொத்து உரிமை மாற்றம் என்பது தீர்ப்பாணை நிறைவேற்றத்திற்கும் பொருந்தும், அதற்கென்று தனியாக ஒரு ஒப்படைப்பு இருந்தால்

விதிகள் படி தீர்ப்பாணை வழங்கப்பட வேண்டும்).

12. இங்கே கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், இந்த விளக்கம் 1976ஆம் ஆண்டின் சட்டம் 104ன் படி உட்புகுத்தப்பட்டது. (இனிமுதல் உரிமையியல் நடைமுறை திருத்த சட்டம், 1976 என்று வழங்கப்படும்) இது 01.02.1977 முதல் அமுலுக்கு வருகிறது. இதுசம்பந்தப்பட்ட வாதங்களில் தெளிவாக தெரியும்படி உள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் 47ன் கீழ் விண்ணப்பம் அளிப்பது என்பது நிறைவேற்றும் நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.

"47. தீர்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றம் நிர்ணயிக்க வேண்டிய வினாக்கள் - (1) தரப்பினர்களுக்கிடையே ஏற்படும் அனைத்து வினாக்களும் தீர்ப்பாணை வழங்கப்படும் போது அவர்கள் சார்பாக உள்ளவர்களுக்கும் நிறைவேற்றத்திற்கான அசல் வழக்கு பற்றியும் அல்லது மனம் நிறைவும் வகையில் தீர்ப்பாணை நிறைவேற்றத்திற்காகவும், நீதிமன்றம் தீர்ப்பாணை நிறைவேற்ற வேண்டுமே அல்லாது ஒரு தனி வழக்கிற்கு வழி வகுக்கக் கூடாது.

(3) சம்மந்தப்பட்ட நபர் தரப்பினரின் அதிகாரப்பூர்வமாக சார்பாக செயல்படுவாரா என்ற கேள்வி எழும்பொழுது இந்த பிரிவிற்காக அந்த கேள்விக்கான பதிலை சம்பந்தப்பட்ட நிறைவேற்றும் நீதிமன்றம் நிர்ணயிக்கும்.

விளக்கம் .1 - இந்த பிரிவிற்காக வேண்டி, ஒரு வாதி தொடங்கிய வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டால் யாருக்கு ஆதரவாக தள்ளுபடி செய்யப்பட்டதோ அவரும் வழக்கின் ஒரு தரப்பினராக கருதப்படுவார்.)

விளக்கம் . 2 - (a) இந்த பிரிவிற்காக வேண்டி ஒரு சொத்தை வாங்குபவரோ அல்லது தீர்ப்பாணை நிறைவேற்றிக் கொள்பவரோ வழக்கின் ஒரு தரப்பினராக கருதப்பட்டு நடத்தப்படுவார்.

(b). தீர்ப்பாணையின் படி சொத்துக்களை ஒப்படைக்கும் பொழுது அல்லது வாங்கியவருக்கு ஒப்படைக்கும் பொழுது அவரது சார்பில் ஆஜராகுபவர் அந்த பரிமாற்றத்தை செயல்படுத்தியவராக கருதப்படுவார், இது தான் தீர்ப்பாணையின் எழுதப்பட்ட வாசகங்களின் விளக்கமாகும்").

13. உரிமையியல் சட்டம் 146வது பிரிவு சார்பாக ஆஜராகுபவர்களின் அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் சம்மந்தப்பட்டது, அதில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.

" 146. சார்பாக ஆஜராகுபவர் சார்பிலோ அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பற்றி இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைக்கு அமுலில் உள்ள நேரத்தில் நடவடிக்கைகள் மற்றும் விண்ணப்பங்கள் எவருக்கு எதிராகவும் எடுக்கலாம். சம்பந்தப்பட்ட நபரே நேரடியாகவும் அவர் சார்பில் வேறு எவரும் நடவடிக்கைகளை மேற் கொள்ளாலாம்.

14. மேல்முறையீட்டாளர்கள் உரிமை பற்றி நிறைவேற்றும் நீதிமன்றம் ஒரு கேள்வியை எழுப்பி சட்டத்தின் 47வது பிரிவை கீழ் மேல்முறையீட்டாளார்கள் திரு,S.N.கனுான் கோவின் ஒப்படைப்பு பெற்றவர்கள் என்றும் (மேலும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் 146 படியும்) ஏ&சி சட்டத்தின் இரண்டு (1) (g)படியும் மேல்முறையீட்டாளர்கள் தங்கள் உரிமைகளை கோருகிறார்கள். அதில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.

"2 சொல்லமைப்புகள், -

(1) வேறு எந்த வகையிலும் பாதிக்கப்படாதிருந்தால் தவிர

(g)சட்டப்படியான பிரதிநிதி என்றால் இறந்த ஒருவரின் சொத்துக்களை பராமரிப்பவர் என்றும் இதில் இடைத்தரகர்களாகவோ உள்ளவர்கள் கூட இறந்தவரோடு சம்பந்தப்பட்டிருந்தால் அவர் சார்பாக செயல்பட்டிருந்தால் என்றாலும் அவரே சட்டப்படியான பிரதிநிதி என்று கருதப்படுவார்.

15. இந்த மேல்முறையீட்டில் திரு.S.N.கனுான் கோவின் ஒப்படைப்பு பெற்றவர்கள் என்ற முறையில் மேல்முறையீட்டாளர்கள் திரு,S.N. கனுான் கோவின் சட்டப்படியான பிரதிநிதிகள் ஆவார்கள். தீர்ப்பாணைக்கும் இவர்களே சட்டப்படியான பிரதிநிதிகள் ஆவார்கள்.

16. மேற்கண்ட பிரச்சனையில் பொதுவான காரணம் ஜுகல்கிஷோர் ஷரப் எதிர்

திருவாளர்கள் ரா காட்டன் கம்பெனி லிமிடெட் தீர்ப்பில் உள்ள முக்கிய அம்சமாகும். தாங்கள் தான் சட்டப்படியான பிரதிநிதிகள் என்று நீதிமன்றங்களில் உறுதி செய்ய தவறுபவர்கள் பிரதிநிதிகளாக கருதப்படமாட்டார்கள் இது உச்ச நீதிமன்ற தீர்ப்புகளுக்கும் பொருந்தும். பத்தி 26ல் கட்டளை XXI விதி 16 உண்மையில் நடைபெற்ற தீர்ப்பாணை பெயர் மாற்றம் ஒப்படைப்பு எழுத்து முலமாக உள்ளது. இது "தீர்ப்பாணை பெற்ற பிறகே " ஏற்படுத்தப்பட வேண்டும் ஆகவே ஒரு ஒப்பந்தத்தின் பெயர் மாற்றம் என்பது தீர்ப்பாணையின் பெயர்மாற்றம் ஆகிவிடாது. தீர்ப்பாணை பெறுவதற்கு முன்பே எடுக்கப்பட்ட ஒப்பந்தங்கள் எதுவும் தீர்ப்பாணை பெயர் மாற்றத்திற்கு ஏற்புடையது ஆகாது. முன்பே எடுக்கப்பட்ட ஒப்பந்தம் என்றாலும் கூட தீர்ப்பாணை விஷயத்தில் கட்டளை XXIவிதி 16 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் படி ஏற்புடையது ஆகாது.

17. மேல்முறையீட்டாளர்கள் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இந்த நீதிமன்றத்தின் பார்வைக்கு மேலும் சில பத்திகளை கொண்டுவந்து , குறிப்பாக பத்தி எண்கள் 52,54,56 மற்றும் 59 ஆகியவற்றை எடுத்துக்காட்டி பம்பாய் உயர் நீதிமன்றம் மற்றும் கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் முன் தீர்ப்புகளையும் எடுத்துக்காட்டி கட்டளை XXI விதி 16 நோக்கம் ஒரு தீர்ப்பாணையின் சம்பந்தப்படாதவர்களுக்கும் கூட சம்பந்தப்பட வைக்கும் என்பதல்ல. இரண்டு கருத்துக்கள் மாறுபட்டு சொல்லப்பட்டுள்ளன அதாவது தீர்பாணைக்கு உதவியாக உள்ள விஷயங்கள் குறித்து கடுமையாக உள்ள ஷரத்துகள் என்னவென்றால் ஒரு பக்கம் நிலுவையில் உள்ள தீர்ப்பாணை மற்றும் மறு பாகம் சமநீதி ஒரு ஒப்பந்தம் எழுத்துமுலமாக ஏற்படுத்தப்படும் போது தீர்ப்பாணைக்கு முன்பே எழுதப்பட்டிருந்தாலும் கூட அதில் எவ்வளவு தேவை என்பதை நீதிமன்றம் கருத்தில் கொண்ட பிறகே ஒரு முடிவுக்கு வரவேண்டும், இது பற்றி பத்தி எண்.53ல் மேலும் தெளிவாக சொல்லப்பட்டு கட்டளை XXI விதி 16ன் படியான முழு விளக்கங்களும் பெறப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் சிந்தனைபடி நிறைவேற்றும் விண்ணப்பத்தினை சமர்பிப்பர் சொத்தின் மீது தனக்கு உரிமையுள்ளது அல்லது மாற்றம் செய்துகொள்ளும் உரிமையுள்ளது என்பதை நிருபிக்கப்படவேண்டும், அதுமட்டுமின்றி இந்த சட்டத்தின் பிரிவை காட்டி லாபம் பெற இயலாது. தீர்ப்பாணை என்பது சொத்தின் பரிமாற்றம் சமந்தப்பட்டது. அது பரிமாற்றத்தின் தேதியையும் குறிக்கும். " தற்பொழுதோ அல்லது எதிர்காலத்திலோ என்றால் சொத்து என்ற வார்த்தைக்கு மட்டுமே பொருந்தா". இம்மாதிரி தீர்ப்பாணைகள் ஏற்கனவே எழுத்து முலம் ஒப்படைப்பு பெற்றவர்களுக்கு எந்த பயனும்

கிடையாது. எழுத்துமுலமான ஒப்படைப்பு முலமாக தீர்ப்பாணைகளை பெயர் பரிமாற்றம் செய்ய இயலாது. குறிப்பாக இந்த ஒப்படைப்புகள் சில ஒப்பந்தங்கள் படி ஆனதால் அவற்றிற்கும் சொத்துக்களுக்கும் சம்பந்தம் இல்லை. சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு தீர்ப்பாணை தானகவே பெயர் மாற்றம் செய்யப்பட்டு விடும் இதற்காவே சட்டத்தின் கட்டளை XXI விதி 16 ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது குறிப்பிட்ட முறை எதையும் சொல்லாததால் எழுத்து மூலமான செய்யப்படும் ஒப்படைப்புகள் முலம் தீர்ப்பாணைகளை பெயர் மாற்றம் செய்ய இயலாது.

18. பூரண சந்திர பௌமிக் - எதிர் - பர்னாகுமாரி தேவி வழக்கின் முன் தீர்ப்பில் கல்கத்தா உயர் நீதிமன்றம் சொல்லியுள்ளவற்றை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. காரணம் இது சமநீதி கோட்பாட்டிற்கு ஏற்புடையது என்றும் வாதியின் சார்பில் பிரதிவாதி ஏற்படுத்தியுள்ள அடமான ஒப்பந்தம் மற்றும் அதன் ஒப்படைப்பு பாதுகாப்பு கருதி உள்ளதால் இதே விஷயம் சம்மந்தமாக ஒரு முன்றாம் தரப்பினருக்கு எதிராக அவர் தரவேண்டிய பணத்தை வசூலிப்பதற்காக தொடங்கப்படும் அசல் வழக்கை தீர்ப்பாணை பெறும் போது அந்த தீர்ப்பாணை அடமாண ஒப்படைப்பு செய்த பிரதிவாதிக்கும் உரிமை ஏற்படுத்துகிறது என்றும் நிறைவேற்றும் மனுவை இந்த பிரதிவாதியும் அளிக்கலாம் என்றும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும் உயர் நீதிமன்றம் இது சம்பந்தமாக ஆட்சேபனைகள் எதுவும் ஏற்புடையவை அல்ல மேலும் புலன்விசாரணை போன்ற கடுமுறை நடைமுறைகள் மற்றும் சட்டப்படியான கேள்விகளுக்கு இடமில்லை என்றும் உரிமையியல் நடைமுறை சட்டத்தின் 47 வது பிரிவு தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றத்திற்கு முடிவுகளை மேற்கொள்ளும் அதிகாரம் உள்ளது என்று தெளிவாக தெரிவித்துள்ளது. இதற்காக வேண்டி பணம் வசூலி க தகுதியுடைய பிரதிவாதி வேறொரு வழக்கையும் தொடங்க தேவையில்லை என்றும் உறுதிப்படுத்தியுள்ளது.

19. மேலும் ஏலத்தின் முலம் பெயர் பரிமாற்றம் செய்யும் சொத்துக்களுக்கும் சொத்து பரிமாற்ற சட்டம் 1882வின் பிரிவு 3ற்கும் உள்ள வேறுபாட்டையும் தெரிவிக்கிறது என்றாலும் கூட நீதிமன்றம் பிரதிவாதிக்கு அளித்த தீர்ப்பாணை நிறைவேற்ற உத்தரவு சொத்து பரிமாற்றத்தின் போலவே உள்ளது என்றும் இது எந்த வகையிலும் கடன் வசூலிப்பதற்காக அளிக்கும் தீர்ப்பாணைக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்றும்

சொல்லப்பட்டுள்ளது. ஆகவே சொத்து பெயர் பரிமாற்றம் பெற்றவர் தீர்ப்பாணையின் அனைத்து சலுகைகளுக்கும் உரியவர் என்றும் உள்ளது. இந்த இடத்தில் தீர்ப்பாணை பெயர் மாற்றம் செய்தவருக்கு எழுத்துமுலமாக ஒப்படைப்பு பெற்றுள்ளதால் கட்டளை XXI விதி 16 உரிமையியல் நடைமுறை சட்டத்தின் படி ஏற்புடையதே ஆகும்.

20. 1976ம் ஆண்டின் உரிமையியல் நடைமுறை சட்டத்தின் திருத்தம் மற்றும் அதன் முக்கியத்துவத்தை அடிப்படையாக கொண்டு இந்த முன் தீர்ப்பை மேல்முறையீட்டாளர்களுக்காக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சமர்பித்திருக்கிறார், ஏற்கனவே ஒப்படைப்பு பத்திரத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வாதங்களுக்கு இந்த ஏலத்தில் எடுக்கக்கூடிய உரிமை பற்றிய வாதம் ஒரு மாற்று வாதம் ஆகும்.

எதிர்மனுதாரர்கள் சமர்பித்துள்ளவை:

21. மேற்கண்டவற்றிற்கு மாறாக எதிர்மனுதாரர்கள் ஒப்படைப்பு பத்திரத்தின் முலம் பெற்ற உரிமைகள் பற்றி தங்கள் கருத்து வேறுபாட்டை சொல்லிருக்கிறார்கள் அவர்களை பொறுத்தவரை இந்த ஒப்படைப்பு பத்திரமே ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு பிரச்சனைக்குரிய ஆவணமாகும். இந்த ஆவணம் 17 ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் கூட 17 ஆண்டுகளுக்குப்பிறகு 2016ம் ஆண்டு வரை இது யார் கண்களுக்கும் காட்டப்படவில்லை. மேல்முறையீட்டாளர்களின் சட்ட அறிவிப்புகளை கூட இந்த ஒப்படைப்பு ஆவணம் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. திரு. சுரேந்திரநாத் கனூன்கோ அவர்கள் சார்பாக 22.3.1999 அன்று கொடுத்துள்ள தீர்ப்பின் போது கூட மேல்முறையீட்டாளர்கள் அதுபற்றி எதுவும் சொல்லவில்லை. உத்தரவின்படி திரு.S.N.கனூன் கோ அவர்களுக்கு 2021ஆம் ஆண்டில் தொகை வழங்கப்பட்ட போது கூட அவர்கள் பாதுகாப்புக்காக தரப்பட்ட காசோலையை பயன்படுத்தி தங்களுக்கு வேண்டிய பணத்தை பெற்றிருக்கலாம். அந்த 2006ஆம் ஆண்டின் உத்தரவிற்கு எதிராக இந்த மேல்முறையீட்டாளர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. குறிப்பாக தீர்ப்பின் உத்தரவு உச்ச நீதிமன்றத்தாலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த மேல்முறையீட்டாளர்கள் திரு. S.N. கனூன் கோ - வின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் அல்ல. ஆனாலும் அதிகபட்ச இந்த மேல்முறையீட்டாளர்கள் இந்த உரிமையியல் நடவடிக்கைகள்முலமாக தங்கள் தனிப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொண்டு இருக்கலாம். தற்போது இந்த தீர்ப்பாணை நிலுவையில்

இல்லாததால் எதிர்மனுதாரர்களுக்கு ஜுகல்கிஷோர் ஷாரப் மற்றும் கட்டளை XXI விதி 16ன் மீது ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் எதுவும் சட்டப்படி பலன்அளிக்காது.

22. மேலும் செய்துள்ள வாதத்தின் படி இந்த மேல்முறையீட்டாளர்கள் திரு. S.N.கனுான் கோ அவர்களால் நியமிக்கப்பட்டவர்களில் சிலர் ஆவர். இவர்களுக்கு அளிக்க வேண்டிய தொகைகள் அவரே திருத்தியிருக்கிறார். அவர் செலுத்த வேண்டிய தொகை நிலுவையில் இருப்பதாக மேல்முறையீட்டாளர் எங்குமே எதையும் குறிப்பிடவில்லை. இந்த மேல்முறையீட்டாளர்கள் அளிக்க வேண்டிய தொகை எதுவும் கிடையாது. ஒப்படைப்பு ஆவணமும் 27.10.1999 தேதியிட்ட காசோலையும் மோசடியான முறையில் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகும். திரு,S.N. கனுான் கோ அவர்களின் விலாசமிட்ட வெற்று காகிதமும், வெற்று காசோலையில் அவர் இட்டிருந்த கையொப்பத்தையும் இவர்கள் துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்கள்.

முடிவாக:

23. இருதரப்பினர்கள் சமர்ப்பித்தவற்றை பரிசீலிக்கும் பொழுது உயர் நீதிமன்றம் கொடுத்துள்ள குறையான உத்தரவில் எதுவும் குறையில்லை என்றும் 1976ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உரிமையியல் நடைமுறை சட்டத்தில் திருத்தங்கள் ஏதும் செய்யப்படவில்லை என்பதே , இந்த மேல்முறையீட்டுக்கு காரணம் என்பது சந்தேகமின்றி தெரியவருகிறது. ஜுகல்கிஷோர் ஷராப் வழக்கில் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது. இந்த கட்டத்தில் இந்த நீதிமன்றம் கருத்தில் கொள்ளவேண்டிய ஒரே விஷயம் என்னவென்றால் மேற்கண்ட தீர்ப்புரையில் சொல்லப்பட்ட சட்டப்படியான நீதி முறைகளுக்கு இந்த சட்ட திருத்தம் ஏதும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறதா என்பது தான்.

24, கட்டளை XXIவிதி 16ன் மீது ஏற்படுத்தப்பட்ட மாற்றம் ஒரு கூடுதல் சேர்க்கப்பட்ட விளக்கமே தவிர அந்த விளக்கம் இதற்கு முன்பு இல்லை என்றும் இருதரப்பாராலும் ஒத்துக்கொள்ளப்பட்டது. தற்பொழுது இந்திய சட்ட ஆணையம் தன்னுடைய 54வது அறிக்கையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் 1908 பற்றி குறிப்பிட்டிருக்கிறது. இந்த வழக்கும் அதில் சேர்க்கப்பட்டதன் காரணம் நீதிமன்றங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தீர்ப்புகளை அளித்ததால் தான். அதாவது ஒரு தீர்ப்பாணை

சம்பந்தப்பட்ட எழுத்து முலமாக ஒப்படைப்பு பெறாத ஒருவர் ஆனால் தீர்ப்பாணை பெற்றவரின் உரிமைகளை கோரலாம் என்று உரிமையியல் நடைமுறை சட்டத்தின் 146வது பிரிவிற்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

25. மதராஸ் உயர் நீதிமன்றம் பெண்ணையா பிள்ளை எதிர் **T.** நடராஜன் ஆச்சாரி வழக்கில் மாற்றாக முடிவு செய்திருக்கிறது. உயர் நீதிமன்றம் உரிமையியல் நடைமுறைச் சட்டம் 146வது பிரிவை பயன்படுத்தி சொத்துக்களை பரிமாற்றம் செய்துகொள்ளலாம் என்றும் ஆனால் அவை கட்டளை XXI விதி 16 உரிமையியல் நடைமுறை சட்டம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் செல்லாது என்றும் சொத்து உரிமை மாற்றங்கள் இந்த சட்டப்பிரிவின் படி முடியாது என்றும் குறிப்பாக தீர்ப்பாணைக்கு பிறகு எதையும் கோர முடியாது என்று எடுத்துச் சொல்லியுள்ளது. இந்த விஷயத்தில் கற்றறிந்த உயர் நீதிமன்ற நீதிபதி இதற்கு முன்பு மதராஸ் உயர் நீதி மன்றத்தில் K.N. சம்பத் முதலியார் எதிர் சகுந்தலா அம்மா வழக்கில் சொல்லப்பட்ட தீர்ப்புக்கு முரணாக தன்னுடைய கருத்தை எழுதி உரிமையியல் நடைமுறை சட்டத்தின் பிரிவு 146ன் படி கட்டளை XXI விதி 16க்கு மேலாக எதுவும் கிடையாது என்று சொல்லியுள்ளது. சட்ட ஆணையம் ஏற்கனவே உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை (இதற்கு சில காலம் கழித்து வழங்கப்பட்ட உத்தரவு) இந்த உத்தரவு ஆந்திர மாநிலம் உயர் நீதிமன்றம் மற்றும் பாட்னா , கேரளா உயர் நீதிமன்றங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. இந்த வகையில் சட்ட ஆணையம் கட்டளை XXI விதி 16ன் மாற்றங்களை ஏற்படுத்தி இந்த சட்டம் எந்த வகையிலும் பிரிவு 146ஐ பாதிக்காது என்றும் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக தனியாக வேறு ஒரு வழக்கை தொடங்க வேண்டியது இல்லை என்றும் தன் கருத்தை சொல்லியிருக்கிறது. ஆணைத்தின் கருத்தின் படி ஒப்படைப்பு ஆவணத்தின் உண்மையை குறித்து தீர்ப்பாணையை நிறைவேற்றும் கட்டத்திலேயே நீதிமன்றங்கள் முடிவு செய்யலாம் என்று தெரிவித்துள்ளது.

26. மேற்கண்ட பரிசீலனைகள் படி இந்த மன்றத்தின் கருத்து என்னவென்றால் கட்டளை XXI விதி 16ஐ திருத்தியதின் அடிப்படை நோக்கமே தனியாக வேறு வழக்குகளை மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது தான் . தீர்ப்பாணைக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட ஒப்படைப்புகளுக்கும், தீர்ப்பாணைக்கு பின்பு ஏற்படுத்தப்பட்ட ஒப்படைப்பு ஆவணங்களுக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. ஆகவே ஜூகல் கிஷோர் ஷராப் வழக்கின் அடிப்படையில் சமநீதி கோட்பாடு ஏற்படுவதற்காக செய்யப்பட்ட

திருத்தங்கள் ஆகும். விளக்கங்களை பொறுத்தவரை சட்டங்களை இயற்றிய சட்டப்பேரவையின் நோக்கம் தெளிவாக தெரிகிறது. இந்த வகையில் இந்த மேல்முறையீடு திருத்தம் ஏற்பட்டதற்கு பிறகே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது. சட்டத்தை நிறைவேற்றிய சட்டப் பேரவையின் கோட்பாடு தெளிவாக உள்ளது. சட்டங்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டதாலேயே இணையாக வேறு ஒரு சட்டம் இயற்றப்பட்டதாக கருதமுடியாது. இந்த வழக்கை பொறுத்த வரை இது சட்ட திருத்ததிற்கு பிறகு ஏற்படுத்தப்பட்ட வழக்காகும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

27. இந்த நீதிமன்றம் சேர்க்க விரும்புவது என்னவென்றால் ஜூகல் கிஷோர் ஷராப் வழக்கில் இரண்டு விதமான விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே தான் சட்ட ஆணையம் சட்டத்தின்படி உள்ள நிலையை தெளிவாக்கவதற்காக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் செல்லத்தகாதவை என்றும் காட்டப்பட்டுள்ளன. சட்ட ஆணையம் அளித்துள்ள விளக்கத்தின் படி கட்டளை XXI விதி 16 மீது ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் எந்த வகையிலும் சட்டத்தின் பிரிவு 146ஐ பாதிக்காது என்றும் சொத்துபரிமாற்றம் என்பது உரிமையியல் வழக்கின் ஒரு விஷயம் என்றும் தனியாக ஒரு ஒப்படைப்பை கோராமல் தீர்ப்பாணையை நிறைவேற்றலாம் என்றும் உள்ளது. மேல்முறையீட்டாளர்கள் உரிமையியல் வழக்குகளில் தரப்பினர் அல்ல என்றாலும் கூட சந்தேகமின்றி தீர்ப்பாணை பெற்றவரின் ஒப்படைப்பு பெற்றவர்கள் என்று தங்களை அடையாளப்படுத்தி கொள்கிறார்கள்.

28. ஒப்படைப்பு பத்திரம் அல்லது அத்துடன் அளிக்கப்பட்ட காசோலை ஆகியவை பற்றி சட்டப்படி ஏற்புடையதா இல்லையா என்பது பற்றி இந்த நீதிமன்றம் கருத்தில் கொள்ளவேண்டியதில்லை என்று ஏற்கனவே தெளிவாக சொல்லியுள்ளது அந்த விஷயம் நிறைவேற்றும் நீதிமன்றத்தின் முடிவுகள் படியே இருக்கும். ஆரம்ப கட்டத்திலேயே விண்ணப்பதாரரின் ஆட்சேபனைகள் நிராகரிக்கப்பட வேண்டியவை ஆகும், காரணம் அவர்கள் ஒப்படைப்பு பெற்றவர்கள் அந்த உரிமை அவர்களுக்கு தீர்ப்பாணை அளிப்பதற்கு முன்பே கிடைத்துள்ளது. மற்ற பணிகள் நிறைவேற்றும் நீதிமன்றத்தின் பணிகள் ஆகும். நாங்கள் கேட்க கூடியது எல்லாம் ஒரு சமாதான தீர்ப்பு கிடைக்குமா என்று தரப்பார்களுக்கு அறிவுறுத்தல்அளிப்பதே ஆகும். ஆகவே இந்த குறை உள்ள உத்தரவை நிராகரித்து இந்த விஷயத்தை மீண்டும் நிறைவேற்றும் நீதிமன்றத்தின் முடிவிற்கே அனுப்ப வேண்டும் என்று

இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஏற்கனவே அதிகபட்சமாக காலம் கடந்து விட்ட நிலையில் நிறைவேற்றும் நீதிமன்றம் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தன்னுடைய கருத்தை மற்றும் முடிவை மேற்கொள்ள வேண்டும் என்பது தான்.

29. இந்த முறையில் இந்த மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன. செலவுகளை தரப்பாரர்கள் அவரவரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி தன்னுடையமொழியில்புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திகொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்"